யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA

Registered as a Newspaper

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

A/L 88
விஞ்ஞான
வகுப்புக்கள்
Iம், IIம் பிரிவுகள்
நடைபெறுகின்றன
IIIம் பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆனி 02 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வால் பிறை 07 (16 06 1986) UTHAYAN - A JAFFNA TAMIL DAILY சுடர்: 179

இனப்பிரச்சினை: உடன் ஆக்கபூர்வ நடவடிக்கை இல்லையேல்

தமிழ் நாட்டில் தொடர்ச்சியான போராட்டங்கள்

மத்திய அரசுக்கு அறிவிப்பு

சென்னை, ஜூன் 16

இலங்கைத் தமிழரின் இன்னல்களுக்கு முடிவு காண்பது குறித்து பாரதம் ஆக்கபூர்வமான நட்வடிக்கை எதனையாவது உடனடியாக எடுக்க வேண்டும். இல்லையேல் தமிழகம் கொதித்து எழும். அடுத்த மாதம் முதல்வாரம் தொடக்கம் பிரச்சினைக்கு முடிவு காணும்வரை தொடர்ச்சியாக தமிழகத்தில் பெரிய அளவில் போராட்டங்கள் நடத்தப்படும். இப்படி தமிழகத் தலைவர்கள் இந்திய மத்திய அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் திரு. எம்.ஜி இராமச்சந்திரன், தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி, திரு. நெடுமாறன் ஆகியோர் உட்பட பல தலைவர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமருக்குத் தமிழகத் தலைவர்கள் பின்னரும் கருத்துக்களைத் தனித்தனியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்று அறிய வந்திருக்கிறது:-

இலங்கையில் தற்போது நிகழ்ந்து வருவது இனக்கொலையே தவிர வேறில்லை.

தீர்வு காண்பது தொடர்பாக இலங்கை அரசின் கூற்றை தொடர்ந்து நம்பவேண்டாம்.

இல்ங்கை அரசை பேச்சளவில் நம்பியிருந்தால் இலங்கையில் தமிழ்இனம் என்ற ஒன்றே இல்லாத நிலை தான் ஏற்படும்.

எனவே இனப் பிரச்சினைத் தீர்வுக்குமத்தியஸ்த நிலையிலிருந்து இந்தியா விலகுமாயின் இனப் படுகொலையைத் தவிர்க்க ஆக்கபூர்வமான செயல் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

அண்மைக் காலத்தில் தமிழர்கள் பல இடங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

வெடிகுண்டில் ஈயச்சன்னங்கள்

கொழும்பு, ஜூன் 16 கடந்த புதன்கிழமை கொட்டாஞ்சேனையில் வெடித்த குண்டினுள் ஈயச்சன்னங்களும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலீஸ் விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

குண்டு வெடிக்கும் போது ஈயச்சன்னங்கள் துப்பாக்கியில் இருந்து புறப்படும் வேகத்தில் பாய்ந்து அருகில் இருப்போரைத் தாக்கும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

யாழ் நகரில் நேற்று ஷெல் தாக்குதல்!

இருவர் காயம்; வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஜூன் 16 யாழ் கோட்டை முகாமிலிருந்து நேற்று கொட்டடிப் பக்கமாக 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் இரண்டு பேர் காயமடைந்தனர். வீடு ஒன்றும் சேதமானது.

நேற்றுப் பகல் இரண்டு மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த ஷெல் தாக்குதல்களினால் மக்கள் பதற்றமடைந்து அவதிப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து நகரில் போராளிகள் ஆயுதங்களுடன்பரவலாக நடமாடினர்.

பண்ணை பொலிஸ் விடுதியில் தங்கியுள்ள சிப்பாய்கள் கோட்டைக்குள் சென்று வரும்வேளைகளில் தான் 'ஷெல்' தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது (உ.10)

எங்களை வற்புறுத்தி திருமலைக்கு அனுப்பாதீர்

சிங்கள அகதிக்குடும்பம் உயர் நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூன் 16 தங்களைக் கட்டாயப்படுத்தி திருகோணமலை மாவட்டத்துக்கு மீண்டும் அனுப்பவேண்டாம் என்று அரசுக்கு உத்தரவிடும்படி கோரி சிங்களக் குடும்பம் ஒன்று அடிப்படை உரிமைச் சட்டத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறது.

இந்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

சட்ட மா அதிபர், பொலீஸ் மா அதிபர், அம்பலாந்தோட்டை பொலீஸ் பொறுப்பதிகாரி, அம்பாந்தோட்டை அரச அதிபர், புனர் வாழ்வுத் திணைக்கள ஆணையாளர் ஆகியோர் எதிர்மனுதார்களாக இவ் விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ளனர்.

அரசமைப்புச் சட்டத்தின் 11, 14ஆவது ஷரத்துக்களின் கீழ் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அடிப்படை உரிமை மீறல் மனுவில் மனுதாரர் கே. இ. ஏ. குசுமாவதி கூறியிருப்பதாவது;

திருமலை மாவட்டத்தில் சேருவில தொகுதியில் நீலாப்பளைக் கிராமத்தில் கணவர், 5 குழந்தைகளுடன் வசித்து வந்

(4ம் பக்கம் பார்க்க)

இந்தியாவுக்கு இரகசிய விளக்கம்

லலித் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 16 இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை அரசு சமர்ப்பித்த புதிய யோசனைகள் தொடர்பாக இந்திய அரசிற்கு சில இரகசியமான விளக்கங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இரகசிய விளக்கங்களை அளிக்கும் நிலைவரை இப்போது பேச்சுவார்த்தை முன்னேறியிருக்கிறது.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி இதனை நேற்று தொலைக்காட்சிக்கான சந்திப்பு நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்தார். (உ)

பலாலியில் மீண்டும் அடகுநகை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 16 மக்கள் வங்கிக்கிளைகளில் அடகு வைத்த நகைகள் மீண்டும் எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் பலாலி இராணுவ முகாமில் வைத்து விநியோகிக்கப்படவிருக்கின்றன.

வல்வெட்டித்துறை பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளையின் நகைகளே இவ்வாரம் வழங்கப்படவுள்ளன.

இது சம்பந்தமாக அடகு வைத்தோர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

பலாலி இராணுவ முகாமில் கடந்த தடவை நகை விநியோகத்தின் பின்னர் நிகழ்ந்த ஹெலித் தாக்குதல் காரணமாக — எமது சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க — அடகு நகை விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் மீண்டும் வெள்ளி, சனிக்கிழமைகளில் பலாலி இராணுவ முகாமில் வைத்து விநியோகிக்கப்பட இருப்பதால் மேற்குறிப்பிட்ட தினங்களில் சகல வாடிக்கையாளர்களும் தவறாது

(4 ஆம் பக்கம் பார்க்க)

இப்படி ஒரு காரணம்

கொழும்பு, ஜூன் 16 சிப்பாய் — போராளி மோதலில் குடிமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் கிளிநொச்சி மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இப்படி கொழும்பில் தேசிய பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் சொன்னதாக அவுஸ்திரேலிய வானொலி நேற்று தெரிவித்தது (உ-எ)

ஜூன் 28 முதல் ஜூலை 4 வரை

ஈழவிடுதலை வாரம்; சென்னையில் மாநாடு

மாணவர் இளைஞர் பொதுமன்றம் ஏற்பாடு

சென்னை, ஜூன். 15 ஜூன் 28முதல் ஜூலை 4 வரை ஈழ விடுதலைக்கான ஆதரவு வாரமாகச் சென்னையில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

ஆசிய மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் மாணவர் இளைஞர் பொது மன்றம் (GUYS) இந்த வாரத்தை ஒட்டி சென்னையில் மாநாடு ஒன்றை நடத்துகின்றது.

சென்னையில் உள்ள உலக பல்கலைக்கழக சேவை நிலையத்தில் இம் மாநாடு ஜூன் 28 முதல் ஜூலை 4 வரை நடைபெறும்.

ஆசிய மாணவர் ஒன்றியமும் இவ்வாரத்தை ஈழ மாணவர்களுக்காக அங்கீகரித்துள்ளது.

17 நாடுகளில் உள்ள 21 மாணவ அமைப்புக்களின் தலைமை நிறுவனமாக ஆசிய மாணவ ஒன்றியம் விளங்குகின்றது.

பிலிப்பீன்ஸ், ஆசியா, ஆஸ்திரேலியா, தாய்லாந்து, ஹொங்கொங், நியூசிலாந்து, பாலஸ்தீனம், நேபாளம் ஆகிய நாடுகளின் மாணவர் அணிகள், இந்திய மாணவர் அணி, ஈழ விடுதலை மாணவர் அணிகள் ஆகியன இம் மாநாட்டில் கலந்து கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரதான இலட்சியத்தை முன்வைத்தே ஈழ விடுதலைக்கான ஆதரவு வாரமும் மாநாடும் நடத்தப்படுகின்றது.

"சுய நிர்ணய உரிமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஊரடங்கு நேரத்திலும் படைகள் - புலிகள் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன், 16 ஊரடங்குச் சட்ட நேரத்தில் கிளிநொச்சியில் நேற்றும் புலிகள் - சிப்பாய்கள் உக்கிரமோதல் நடைபெற்றது.

கடந்த நான்காம் திகதி ஆரம்பமான மோதல் நான்கு தினங்கள் உக்கிரமாக நடந்த பின்னர் சற்றுத் தணிந்தது.

கிளிநொச்சியில் இரண்டாம் கட்ட 'யுத்தம்' தொடர்கிறது

—அலுவலகச் செய்தியாளர்:- கே. ஆர்.—

எனினும் இரண்டாம் கட்ட யுத்தம் சனிக்கிழமையன்று மீண்டும் ஆரம்பித்தது.

நேற்றுக்காலை தொடர்ந்தும் இராணுவச் சிப்பாய்கள் கிளிநொச்சி முகாமை விட்டு வெளியேறிவந்தனர். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் சிப்பாய்கள் மீது உக்கிர தாக்குதல் நடத்தினர் என்று அறியவந்தது.

இத்தாக்குதலின்போது புலிகள் இயக்கத்தினர் நவீனரக ஆயுதங்களும், ஆட்லறி செல் குண்டுகளும் பாவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிக்கொப்டர் ஒன்று குடிமனைகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் இதனால் பலர் காயமடைந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை தொடங்கிய மோதல் மாலை வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததாகச் சொல்லப்பட்டது.

இதேவேளை நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

16 — 6 — 1986
திங்கட்கிழமை
சுபநேரம்:
11.53 முதல் 1.23 வரை
ராகுகாலம்:
7 23 முதல் 8.53 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
நவமி முன்னிரவு
11.05 வரை

இலங்கைக்கு உதவி எதுவும் வழங்காதீர்!

உலக நாடுகளுக்கு கூட்டணி விடுத்த அவசர வேண்டுகோள்

சென்னை. ஜூன் 15 இலங்கைக்கு உதவி எதுவும் வழங்காதீர்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த அவசர வேண்டுகோளை உலக நாடுகளுக்கு விடுத்துள்ளது. சென்னையில் வைத்து இந்த அறிக்கை விடப்பட்டது.

உலக நாடுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை, தமிழனுக்கு எதிராக யுத்தம் நடத்துவதற்குத் தான் இலங்கை அரசு பயன்படுத்துகிறது.

எனவே உலக நாடுகள் இலங்கைக்கு உதவுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இவ்வாறு கூட்டணியின் அவசர வேண்டுகோளில் கோரப்பட்டுள்ளது. (அ-எ)

இனப்பிரச்சினை

அரசியல் தீர்வு காண அரசு திடசங்கற்பம்

ஜனாதிபதி சொல்கிறார்

கண்டி, ஜூன் 16 இனப்பிரச்சினை தேசியப் பிரச்சினையாகிவிட்டது. அதற்கு அரசியல் தீர்வு ஒன்றை விரைவில் காண்பது என்று அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

நாம் உத்தேசித்துள்ள தீர்வை நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்படும்.

எனினும் தீர்வு சரியானதாக இருக்கும் பட்சத்தில் எந்த எதிர்ப்பு வந்தாலும் அதனை அமுல் செய்தே தீருவோம். அதுவே ஜனநாயகம்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கண்டியில் நடந்த மத வைபவம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

இனப்பிரச்சினைக்கு என்ன விதமான தீர்வைக் கொண்டு வரலாம் என்பதனை ஏனைய கட்சிகளுடன் கலந்து ஆலோசிக்கவே சர்வகட்சி மாநாடு கூட்டப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், ஆக்கபூர்வமான யோசனைகளைத் தெரிவித்தால் அரசாங்கம் அவற்றைக் கருத்தில் கொள்ளும்.

அதன் பின்னர் வகுக்கப்படும் இறுதித் தீர்வை மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை உண்டாக்குவதை தடுக்க எவருக்கும் இடமளிக்கமுடியாது.

சரியான தீர்வை எந்த எதிர்ப்பின் மத்தியிலும் அரசு நிறைவேற்றியே தீரும். அதுவே ஜனநாயகம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க மக்களின் ஆதரவு அரசாங்கத்துக்குத் தேவை. அதனை அவர்கள் தயங்காது வழங்க வேண்டும்.

மக்கள் ஒவ்வொருவரின் பாதுகாப்பினையும் அரசாங்கம் உறுதிப்படுத்திக் கொள்ளும். அரசு அதற்கான ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகிறது. இது விடயத்தில் மக்களின் ஒத்துழைப்பும் அவசியம். இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

திருமலையில் ஊரடங்கு தொடர்கிறது

திருகோணமலை நிர்வாக மாவட்டத்தில் நேற்று இரவு 7 மணி தொடக்கம் பத்து மணி நேர ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது. இன்று காலை 5 மணியுடன் ஊரடங்குச்சட்டம் நீக்கப்படவிருந்தது. (உ-எ)

முசசுகிமுரளி



உது எந்தப் பருவ ஞானமோ ..? ஓம், உப்பிடி உப்பிடித் திடசங்கற்பங்கள் செய்துதானே காலமும் நேரமும் கடந்து போகுது தமிழர் மட்டுமில்லை சிங்களவரும் அழிஞ்சு போனெம்...!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

கொழும்பில் ஹோட்டல்களுக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஜூன்.16
கொழும்பில் உள்ள 5 ஸ்ரார் ஹோட்டல்களுக்கு விசேஷ பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஹோட்டல்களில் போராளிகள் தங்கியிருப்பதாகக் கூறப்படும் புலனாய்வு அறிக்கைகளைத் தொடர்ந்துதான் இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்கிடோக்கி சாதனங்களுடன் தமிழர்கள் சிலர் ஐந்து ஸ்ரார் ஹோட்டல் ஒன்றில் கடந்த வாரம் தங்கி இருந்ததாக இந்தப் புலனாய்வு அறிக்கை தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து மாறு வேடத்தில் பொலிஸார் ஹோட்டல்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர். (இ-[illegible])

விஷ்ணு ஆலய சம்பவம் குறித்து அத்துலத்துக்கு புகார்

மட்டக்களப்பு, ஜூன் 16
வந்தாறுமூலை மகா விஷ்ணு ஆலயத்தினுள் சீருடையினர் புகுந்து புனிதத் தன்மைக்கு மாசு ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு ம. சிவநேசராஜா தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலிக்கு முறையிட்டிருக்கிறார்.

ஜூன் 8 ஆம் திகதி சீருடையினர் ஆலயத்துக்குள் புகுந்து பிரதம பூசகரைத் தாக்கினர்.

ஆலயத்தினுள் வைத்து ஆலயத்துக்கு மாசு ஏற்படுத்தக் கூடிய உணவு வகைகளைச் சாப்பிட்டனர்.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலிக்கு அனுப்பிய முறைப்பாட்டில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. சிவநேசராஜா குறிப்பிட்டார். (இ-எ-21)

வல்வெட்டித்துறையில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்க கோரிக்கை

யாழ்- அரச அதிபரிடம்

பிரசைகள் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்.16
கடந்த செவ்வாய் புதன் கிழமைகளில் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற முப்படைத் தாக்குதலின்போது பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு அரச பணிமனைகள் மூலம் உதவிகள் வழங்குமாறு உடுப்பிட்டி பிரசைகள் குழு யாழ் அரசாங்க அதிபரை கேட்டுள்ளது.

இதுதொடர்பாக இப்பிரசைகள் குழு யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரின் விவரம் வருமாறு:-

10ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளினுல் வல்வைப் பிரதேச மக்கள் மட்டுமன்றி சம்பர்மலை, சொம்மந்தரை, வல்வெட்டி, செருடாவில், உடுப்பிட்டி, இமையாணன் போன்ற பிரதேச மக்களும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தங்கள் சொந்த வீடு வாசல்களை இழந்து வேறு பாதுகாப்பான இடங்களைத் தேடி இடம் பெயர்ந்துள்ளார்கள்.

தங்களின் தொந்தத் தொழில்களை இழந்துள்ளார்கள்.

இந்த இராணுவ நடவடிக்கைகளினுல் உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னவன் தேவிகா (24 வயது) என்னும் யுவதி இறந்துள்ளார்.

மேலும் பலர் இறந்திருக்கலாம் என அஞ்சுகிறோம். பலர்காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ ஜேர்மன்
★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா, பொண்ட் (Bond) ரிக்கட் ஆகியனவும்
செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:
INTERSUN GROUP
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

குறிப்பு:
பிரான்சு, ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளுக்கு முற்பணம் தந்தவர்கள் 25-06-86க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

கமலுடன் இணைந்து நடிப்பாராம் சுஹாசினி

சிறந்த நடிகையாகத் தெரிவாகிய பின் நடிகை சுஹாசினி பேட்டி ஒன்றை அளித்தார்.

இந்தப் பேட்டி பிரபல ஆங்கில சஞ்சிகையான 'புரொன்ட்லைன்' இல் வெளியானது. அதன் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்

கே; கமல் உங்கள் அபிமான நடிகரா?

ப; ஆம்.

கே; கமலுடன் இணைந்து நடிக்க முடியவில்லையே என்று வருந்துகிறீர்களா?

ப; ஆம். இருவரும் ஒன்றாக நடிப்போம் என்றுஎண்ணுகிறேன். இருவரையும வைத்து தமிழில் படம் எடுக்க ஒருவர் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது

கன்னடப் படம் ஒன்றில் கமலுடன் நான் நடித்துள்ளேன். அது ஒரு சுவையான நிகழ்ச்சி.

கே; நீங்கள் மதிக்கும் நடிகைகள் உள்ளனரா?

ப; ஷபானு, ஸ்மிதா என்று எல்லாரும் சொல்கிருர்கள். நானும் அவர்களையே விரும்புகிறேன்.

தென் இந்தியாவிலும் ஒரு நடிகை இருக்கிருர். அவர்தான் ஸ்ரீ வித்யா. ஷபானு, ஸ்மிதா ஆகியோரிலும் பார்க்க சில இடங்களில் ஸ்ரீ வித்யா திறமையாக நடித்து இருக்கிருர்.

கே; பெரிய டைரக்டர்களின் படங்களில் நடித்து விட்டீர்கள். அடுத்து என்ன?

ப; சத்யஜித்ரேயின் படத்தில் நடிக்கக் கனவு காணுகிறேன். ஆனல் அது முடியாத காரியம்.

தினசரி சினிமா

தம்பாலை இந்துக்கோயில் வரை வந்து திரும்பிய சிப்பாய்கள்

பலாலி, ஜூன் 16
சிப்பாய்கள் தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து அச்சுவேலிப் பக்கமாக தம்பாலை இந்துக் கோவிலுக்கு சமீபமாக வந்து திரும்பிச் சென்றனர்

கடந்தவியாழக்கிழமை நடந்த இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

வியாழன் பிற்பகல் இரண்டு மணியளவில் பலாலி முகாமில் இருந்து 50க்குமேற்பட்டசிப்பாய்கள் தம்பாலைப் பக்கமாக வந்து கொண்டிருந்தனர்

இதனை அவதானித்த தம்பாலை இடைக்காடு மக்கள் தோட்டங்களில் இருந்தும் வீடுகளில் இருந்தும் ஓடி ஒளிக்கத் தொடங்கினர்.

சென்றியில் நின்ற விடுதலைப் புலிகள் தாக்குதலுக்கு ஆயத்தமானுர்கள். முதற்கட்டமாக 'கிறனேற்' புலிகளால் வீசப்பட்டது.' கிறனேற்' சத்தத்துடன் சிப்பாய்கள் அவசரமாக திரும்பிச் சென்றனர்.

சில மணி நேரத்தின் பின் அச்சுவேலி, தம்பாலை, இடைக்காடு,வளலாய்ப் பகுதிகளை நோக்கி ஹெலிக்கொப்டர் ஒன்று மிகவும் ஆறுதலாக வானத்தில் தரித்து நிற்பது போன்ற - வேகத்தில் ரோந்து சுற்றிக் கவனித்தது.

சுமார் இரண்டு மணித்தியாலங்களாக இவ்வாறன ரோந்து நடவடிக்கை நீடித்தது.

எனினும் சூட்டுச் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை.

தம்பாலை, வல்லை, வளலாய்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களுடன் மக்களை காப்பாற்றும் முயற்சியினைப் பலப்படுத்தியுள்ளனர். (இ -119)

கலை, கலாசார வளர்ச்சியிலும் ப. நோ. கூ. சங்கம் சேவை

பெருமன்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 16
எமது பிரதான சேவை மக்களுக்கான உணவுப் பொருள் விநியோகம் என்றுலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உப விதிகளுக்குள் பிரதேச கலை, கலாசார வளர்ச்சிக்கான உதவிகளை வழங்கவும் மாணவர்களது கல்வித்தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இடமளிக்கப்பட்டுள்ளது தற்போது வறிய மாணவி ஒருவருக்குப் பல்கலைக்கழகப் படிப்பிற்காசப் புலமைப் பரிசிலை வழங்கி வருகின்றோம்.

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் கலாசார கூட்டுறவு பெருமன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்த சங்கத் தலைவர் திரு கே. சிதம்பரப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

எழுத்தாளர் திரு நெல்லை க பேரன் பேசுகையில், '' ஏனைய பகுதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் எடுத்துக்காட்டாக எமது சங்கம் பிரதேச எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் ஊக்குவிக்க முன் வந்தது பாராட்டிற்குரியது'' என்றார்.

திரு தெணியான் பேசுகையில், ''எமது எழுத்தாளர்கள் பலர் சொந்தச் செலவில் புத்தகங்களை அச்சிடமுடியாமல் கஷ்டப்படுகிருர்கள். இவர்களுக்கு இச்சங்கம் உதவ முன்வரவேண்டும்'' என்றார்.

சங்கத்தின் உப தலைவர் திரு செ. சதானந்தன் பேசுகையில்,'' இம்மன்றத்தின் உதவியுடன் எமது பிரதேசக் கலை, கலாசார முயற்சிகளை விரிவடையச் செய்யவும் மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு உதவி செய்யவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க முடியும்'' என்றார்

திருவாளர்கள் எஸ். வன்னியகுலம், த. கலாமணி, குப்பிழான் ஐ சண்முகன், கருணையோகன், கோவி நேசன் ஆகியோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (இ)

அந்தியேட்டி வீடு சென்ற இருவர் கைது

யாழ்ப்பாணம் ஜூன் 16
வயாவிளான் பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்கு அந்தியேட்டிக்குச் சென்ற இருவர் சிப்பாய்களினுல் கைது செய்யப்பட்டுப் பலாலி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

நேற்று முன் தினம் வயாவிளானில் இருந்து புறப்பட்ட சிப்பாய்கள் வயாவிளான் வீதியாக வந்தபோதே இவர்களைக் கைது செய்தனர்.

இது தொடர்பாக இவர்களின் பெற்றோர் யாழ் அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர். (இ-10)

தமிழர் சடலம் வெட்டுக் காயங்களுடன்

திருகோணமலை ஜூன் 16
திருகோணமலை மடத்தடிப் பகுதியில் தமிழர் ஒருவரின் சடலம் வெட்டுக் காயங்களுடன் கிடக்கக் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

துறைமுக அதிகார சபையில் வேலை செய்து வந்தவரானசெல்வராசா என்பவரின் சடலமே அது என்று பின்னர் அடையாளங் காணப்பட்டது. (இ-எ-150)

மனிதத்தன்மை அற்ற செயல்

யாழ்ப்பாணம், ஜூன் 16
மண்டைதீவுக் கடலில் வைத்து முப்பதுக்கு மேற்பட்ட மீனவர்கள் அரச படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செயல் மனிதத் தன்மையற்ற கொடூரச் செயலாகும்.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் எஸ். தேவராஜா வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-ஒ)

நாற்று மேடை போட்டி

சாவகச்சேரி ஜூன் 16
அகில இலங்கை நாற்று மேடைப்போட்டிவரிசையில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் கச்சாய் தெற்கைச் சேர்ந்த திரு. ஏ அண்ணாமலை முதலாவது பரிசுக்குரியவராக தெரிவுசெய்யப்பட்டார்.

இதற்கான பரிசுத்தொகையாக 2 000 ரூபா இவருக்கு வழங்கப்படும் எனத் தெரியவருகிறது' (இ-31)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

வல்வை தாக்குதல் குறித்து ஜனதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 16
கடந்த 10 ஆம் திகதி 11ஆம்திகதி வல்வெட்டித்துறையில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மிகவும் கொடூரமான செயல் ஆகும்.

உடுப்பிட்டி பிரசைகள் குழு அண்மையில் வல்வெட்டித்துறையில் நடந்த தாக்குதல்கள் பற்றி ஜனதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

மகஜர் விவரம் வருமாறு;

ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பாதுகாப்பு படைகள் மிகவும் கண்மூடித்தனமான முறையில் பொது மக்கள் மீது தாக்குதல்களை நடத்தி உள்ளன.

இதை மிகவும் மன வருத்தத்துடன் எமது பிரதேச மக்களின் சார்பிலும் ஜனநாயகத்தை விரும்பும் சகல மக்களின் சார்பிலும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

முப்படைகளினுல் தொடர்ச்சியாக ஏவப்பட்ட பீரங்கி, ஷெல் தாக்குதல்களாலும், விமானக்குண்டு வீச்சு தாக்குதலாலும் ஹெலிக்கொப்டரினுல் நடத்தப்பட்ட தாக்குதல்களினுலும் பாதிக்கப்பட்ட மக்கள் எண்ணிக்கை கணக்கில் அடங்காது.

அரச படைகளினுல் நடத்தப்பட்ட மேற்படி தாக்குதல் அப்பாவிப் பொதுமக்கள் மேல் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பயங்கரமான செயல் என்றே கூற வேண்டி உள்ளது

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-ஓ-10)

விளையாட்டு போட்டி மூலம் மாணவரிடையே கூட்டு முயற்சி ஏற்படும்

முன்னாள் கல்வி அதிகாரி உரை

யாழ்ப்பாணம், ஜூன் 16
மாணவர்கள் வளர்ச்சியில் பெற்றேரின் பங்கும் முக்கியமானதாகும். விளையாட்டுப் போட்டிகள் மூலம் மாணவர்களிடம்பொறுமை, அமைதி, சகிப்புத் தன்மை கூட்டு முயற்சி சிறந்து ஓங்கும்.

இளைப்பாறிய வட்டாரக் கல்வியதிகாரி திரு. ச. சபாபதிப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினர்.

கடந்த புதன்கிழமை இவ்விளையாட்டுப் போட்டிகள் பாடசாலை அதிபர் திரு. கி. சிவமணி தலைமையில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் அங்கு உரை நிகழ்த்துகையில்கல்விவளர்ச்சிக்கு ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றேரும் உதவுதல் வேண்டும் என்றார்.

திரு. வே. சிற்சபேசன், வைத்தியர் திரு. ச. சோமசுந்தரம், திரு. ந. கிருஷ்ணபவன் ஆகியோரும் உரையாற்றினர்சள்.

விளையாட்டுச் செயலாளர் ஆசிரியர் திரு. சி. [illegible] யுரையுடன் போட்டி நிறைவெய்தியது. (இ-10(

பிரஜைகள் குழு அனுதாபம்

மண்டைதீவு, ஜூன் 16
மண்டைதீவில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு மண்டைதீவு மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றுர்கள் இவர்களின் குடும்பங்களுக்கு எங்கள் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மண்டைதீவில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற சம்பவத்தையொட்டி மண்டைதீவு பிரஜைகள் குழு வெளியிட்ட அனுதாபச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டது.

மண்டைதீவின் வரலாற்றிலே என்றுமே நடைபெருத இக் காட்டுமிராண்டித் தனத்தால் பலியான ஏழை மீனவர் குடும்பங்களுக்கும் மற்றவர்களுக்கும் உடன் அரசு நஷ்ட ஈடு வழங்கவேண்டும். இந்த அநீதியான செயலை புரிந்தவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது (இ-ஓ-88)

35 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 16
சரவணை சின்னமடு மாதிரிக் கிராமத்தில் ஆரம்பத்தில் 90 வீடுகள் கட்டுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டு இருந்தும் 35 வீடுகளே கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

ஏனைய 55 விண்ணப்பதாரர்களுக்கும் 10 லட்சம்வீட்டுத் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுல் கடன் கொடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தும் 16 விண் [illegible] தற்பொழுது கடன் கொடுக்கப்பட்டுள்ளது. (இ-ஓ)

மற்றொரு சரத் உருவாக வேண்டும்

அஞ்சலிக் கூட்டத்தில் உரை

உடுப்பிட்டி, ஜூன் 16
ஒடுக்கப்பட்டவர்கள், உரிமை இழந்தவர்கள் ஆகியோருக்காக குரல் கொடுக்கக்கூடிய இன்னொரு சரத்தை உருவாக்க வழிவகுப்பதே எமது இன்றைய கடமை ஆகும்.

புலோலி அல்வாய் மக்கள் ஒன்றியம் புலோலி தெற்கு, காந்தியூரில் ஒழுங்கு செய்திருந்த சரத் முத்தெட்டுவேகம அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. பி. சிவநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

அஞ்சலிக் கூட்டத்திற்கு புலோலி — அல்வாய் மக்கள் ஒன்றியத் தலைவர் திரு. ஆ. சி. தம்பிமுத்து தலைமை வகித்தார்.

திரு. சிவநாதன் தொடர்ந்து பேசுகையில், இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகள் இல்லாத காலத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழ் இனத்திற்காகவும், உரிமைகள் இழந்தவர்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்காகவும் குரல் கொடுத்தார் சரத்.

இவ்வாறன எல்லா அடக்கு, ஒடுக்கு முறைகளிலிருந்துவிடுதலைகளைப் பெற்றெடுப்பதற்காகக் குரல் கொடுக்கக் கூடிய ஒருவர் எமக்கு கட்டாயம் தேவை.

இப்படி அவர் கூறினர்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ் மாவட்டச் செயலாளர் திரு பொன் குமாரசாமி, புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு சோ. அருணகிரி, திரு. எம். சிறீபதி, திரு. வே.சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்கள். (இ-157)

போலி பாஸ்போட் 2 தமிழருக்குத் தண்டனை

கொழும்பு, ஜூன் 16
போலி பாஸ்போட்டைப் பாவித்து வெளிநாடு செல்ல முயற்சித்த குற்றத்தை ஒப்புக்கொண்ட இரண்டு தமிழ் இளைஞர்களுக்கு அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

கொழும்பு, கிராண்ட்பாஸைச் சேர்ந்தவர்களான ராமசாமி சிவராசா, சண்முகம் விஜேந்திரன் ஆகியோரே இத் தண்டனைக்கு ஆளானவர்கள்.

2 000 ரூபா அபராதம் ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்டது- அபராதம் செலுத்தத் தவறினுல் 6 மாதக் கடுங்காவல் சிறைவிதிக்கப்பட்டது.

இதைவிட 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடச் சிறைத் தண்டனையும் இளைஞர்களுக்கு விதிக்கப்பட்டது

கொழும்பு கோட்டை பதில் நீதிவான் திரு. வால்டர் ஜெயவர்த்தன இத் தண்டனைகளை வழங்கினர். (இ-எ)

10 பேர் கைது

கொழும்பு, ஜூன் 16
எயர் லங்கா குண்டு விமானத் தகர்ப்புச் சம்பவம் தொடர்பாக சுங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த பத்து ஊழியர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

49ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 20-06-1967
ஆண்டவன் அடியில்: 29-04-1986

குமரர் சதாசிவம் தில்லைநடராசா
(ஈழமன்னன்)

"தோற்றம் துடியதனில்
தோன்றும் திதி
அமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே
சங்காரம் ஊற்றமாய்
ஊன்றும் மலர்ப்பதத்தே
உற்ற திரோத(ம்)
முத்தி
நான்ற மலர்ப்பதத்தே
நாடு''
பாதிநாட ளித்தபின்பு
பறித்திட நினைத்த
இந்த தீயவஞ்சகச்
சூதினுல் வெல்வோம்
என்று சொல்வது
தருமந்தானே
இக்கொடிய
வார்த்தை
காதினுங்
கேட்கலாமோ?
கனவிலும்
நினைக்கலாமோ?
கணப்பொழுதிலே
சென்று
சாவிலும் வீரங்காட்டிச்
சமர்செய்து புகழோடு
மறைந்தாயன்றே.
தாயகமண்ணை மீட்கப்
பதினறு வயதில்
படிப்பை உதறித்தள்ளி
பயிற்சி பெற்று, பாரில்
வீரதீரச் செயல்களைச்
செய்து புறமுதுகிடாது
மறைந்த மாவீரன்
ஈழமன்னனுக்கு
எமது உளங்கனிந்த
கண்ணீர் அஞ்சலிகள்

பெற்றேர்,சகோதரர்கள்,
உறவினர்கள்,நண்பர்கள்
இலசடி, சம்பு வீதி,
[illegible]

உதய சங்கற்பம்

நீர் அல்லாவைக் காண்பது போன்று அவனை நீர் வணங்குவீராக! நீர் அவனை காணாவிடினும் அவன் உம்மைக் காண்கின்றான்.

—நபி (ஸல்)

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 15 2வது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

16 06.86

தொலைபேசி 24605
22075
ஏ. இல.28

கடற்றொழில் தடை; அடிப்படை உரிமை மீறல்

தென்னிலங்கையில் குண்டுகள் வெடிப்பது பெரும் தேசியப் பிரச்சினையாகிவிட்டது. சிங்கள மக்களைப் பாதுகாக்க வக்கில்லாமல், —சரியான வழி தெரியாமல் அரசாங்கம் திண்டாடுகிறது. தேசிய பாதுகாப்பு அமைச்சர் நிதமும் தனது தலைமயிரைப் பிடித்துப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்!

சிங்கள மக்களே! கவனமாக நடந்து கொள்ளுங்கள். அரசாங்கத்துக்கு உதவுங்கள். குண்டு வெடிப்புகளைத் தடுக்க சிவில் பாதுகாப்பு ஆணையாளரை நியமிக்கப் போகிறோம்.

தெற்கில் நடைபெறும் விழாக்கள், கொண்டாட்டங்களில் எல்லாம் மேற்கண்டவாறுசொல்லி அரசாங்கத் தலைவர்கள் பெரும்பான்மை இன மக்களைச் சாந்தப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

தமது தடுப்பு நடவடிக்கையின முதற்கட்டமாக வடக்கில் இருந்து விளைபொருள்கள், கடலுணவுகள் தருவிப்பதை அவர்கள் நிறுத்திவிட்டார்கள்.

ஆனையிறவுக்கு அப்பால் போவதானால், வாகனங்களில் உள்ள பொருள்களை தடைமுகாமில் இறக்க வேண்டும். படையினர் சோதித்த பின்னரே அவற்றை எடுத்துச் செல்லலாம். ஏற்றி இறக்கும் செலவுகளை வாகனச் சொந்தக்காரரே செலுத்த வேண்டும். இவ்வாறு சொல்லில் அடங்காத கட்டுப்பாடுகளை விதித்து விட்டார்கள்

அதனால் குடாநாட்டில் விளையும் விவசாய உற்பத்திகளும், கடலுணவுகளும் விலைபோகாத நிலைமை உருவாகி இருக்கிறது. இது அரசாங்கம் தமிழரின் பொருளாதாரத்துக்கு அடிக்கடி போடும் அடிகளில் ஒன்று.

கடற்றொழிலைப் பொறுத்தவரையில் மூன்றாவது அடியையும் அரசாங்கம் அடித்துவிட்டது.

குடாநாட்டைச் சூழவுள்ள, வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சூழவுள்ள கடற்பிரதேசத்தில் தொழில் செய்யத் தடை விதித்தது முதலாவது அடி. கடலுணவுகளையும் தெற்கே கொண்டு செல்லக் கட்டுப்பாடுகள் போட்டது இரண்டாவது அடி. குடாநாட்டைச் சூழவுள்ள ஏரிகளிலும் மீன் பிடிக்கக் கூடாது என்று இப்போது தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அது மூன்றாவது அடி.

மொத்தத்தில் வடக்கின் கடற்றொழிலுக்கே சம்பூரணமாக சாவு மணி அடிக்கப்பட்டுவிட்டது. இது மிகப் பெரும் சதி

பாதுகாப்பு என்ற பெயரில் வடபகுதி மீனவர்களைச் சாகடிக்கும் சதி. கடல் வழியாக சட்டவிரோதமாக ஆயுதங்கள் வருவதற்கு வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் உடந்தையாக இருக்கிறார்கள் என்று அரசு நினைக்கிறது. அதனால் அவர்கள் வயிற்றில் அடிக்க வேண்டும் என்று வஞ்சம் தீர்க்கும் சதி இது.

தமது தொழிலைச் செய்தபோது கூட, அடிப்படை வசதிகளைச் சரியாக அனுபவிக்க வாய்ப்பில்லாத நிலை மீனவர்களுக்கு இருந்து வந்தது. அவர்கள் தலையில் ஓங்கி அடிப்பது போல, கடற்றொழிலை வடக்கில் தடைசெய்தால் அவர்கள் கஷ்டங்கள் எப்படி இருக்கும் என்பதை இங்கு கூற வேண்டியதில்லை.

கடற்றொழிலைத் தடை செய்து விட்டு, உணவு முத்திரை வழங்கினால் மீனவர் குடும்பங்கள் பசி, பட்டினி இன்றி வாழ முடியுமா? மாதத்தில் ஆகக்குறைந்தது 1,500 ரூபா ஆகுதல் அவர்களுக்குக் கஷ்ட நிவாரணம் வழங்க வேண்டாமா?

ஒருவனை, அவன் விரும்பிய தொழிலைச் செய்யவிடாது தடுப்பது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும். இயற்கை தந்த கடல் வளத்தை, தனது சொந்த மண்ணுக்கு அருகில் உள்ள கடலை, அதன வளத்தைப் பாவிக்காது தமிழ் மீனவரைத் தடுப்பதும் மனித உரிமை மீறலாகும்

பாதுகாப்பு என்ற பெயரில் தமிழ் மீனவர்கள் அடிப்படை உரிமை - தொழில் உரிமை பறிக்கப்படுகிறது. இதனை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். கடற்றொழிலாளர் நலனில் அக்கறை கொண்டவர்கள் இதனைச் செய்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் அடிக்கடி கடற்றொழிலைத் தடை செய்வதை நிறுத்துமாறு சர்வதேச இயக்கங்கள் மூலம் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

‘சமயக் கோட்பாடு பிரதிபலிக்க வேண்டும்’

சமயம் எமது அன்றாட வாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டும். சமயக் கோட்பாடுகளை அறிவதோடு நின்றுவிடாது எம் வாழ்வில் நாம் அதைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நால்வர் திருஉருவப்பட அங்குரார்ப்பண விழாவில் அவர் உரை நிகழ்த்தினார்.

பிரபல ஓவியர் ஞானகுரு வரைந்த நான்கு நாயன்மார்களின் உருவப்படங்கள் விழாவில் வைக்கப்பட்டிருந்தன. இப்படங்கள் கல்லூரி விநாயகர் ஆலயத்தில் இருந்து பாரதி மண்டபத்திற்கு மாணவிகளால் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

விழாவுக்குத் தலைமை வகித்த யாழ் பல்கலைக் கழக பதிவாளர் வ. ந. சிவராஜா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

பிரதம கல்வி அதிகாரி கு. சோமசுந்தரம், வட்டாரக் கல்வியதிகாரி எஸ். வைநாயகமூர்த்தி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

சிவதர்ம வள்ளல் திரு. க கனகராசா நால்வரின் உருவப்பட பிரதிகளை மாணவிகளுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

ஸாம்பிய படைகள் உஷார் நிலையில்

தென்னாபிரிக்காவின் தாக்குதலை சமாளிக்க

லுசாக்கா, ஜூன்.15

தென்னாபிரிக்காவிலிருந்து வரும் எந்த அச்சுறுத்தல்களையும், தாக்குதல்களையும் சமாளிக்கக் கூடிய வகையில் ஸாம்பியா நாட்டுத் துருப்புகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஸாம்பியாவின் வடபகுதியின் தாக்குதல்களை நடத்த தென்னாபிரிக்கா திட்டமிட்டிருக்கிறது என்று கிடைத்த தகவல்களை அடுத்தே ஸாம்பியத் துருப்புகள் உஷார் படுத்தப்பட்டன.

ஸாம்பியத் தலைவர் கெனத் கவுண்டா இதனைத் தெரிவித்தார்.

ஸாம்பியாவில் வைத்து அண்மையில் ஒன்பது வெள்ளை இனத்தவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவரிடமிருந்து தென்னாபிரிக்காவின் தாக்குதல்கள் குறித்த திட்டங்கள் ஆதாரங்களுடன் கிடைக்கப் பெற்றன— இப்படி ஜனாதிபதி கவுண்டா தெரிவித்தார். (உ-ஒ)

தாட்சர் நிராகரிப்பு

லண்டன், ஜூன் 15

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தட்சர் மீண்டும் நிராகரித்துள்ளார்.

முழு பொருளாதாரத் தடைகள் விதிப்பதால் நாட்டில் வன்முறை நீங்கி விடும் என்ற வாதத்தை பிரிட்டன் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் டெலிவிஷன் பேட்டியில் அவர் தெரிவித்தார். (உ-ஒ)

சிரியா - ஈரான் ஆதரவாளர் மோதல் பலர் உயிரிழப்பு?

பெய்ரூட், ஜூன் 15

லெபனான் தலைநகரான பெய்ரூட்டிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் சிரியா ஆதரவாளர்களுக்கும் ஈரானிய ஆதரவாளர்களுக்கும் இடையே பலத்த மோதல் ஏற்பட்டது.

இதனால் பலர் உயிர் இழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதே நேரத்தில் லெபனானிலுள்ள முஸ்லிம் பிரமுகர்கள் டமஸ்கஸில் கூடி பிரச்சினைகளை ஒரு சுமுக முடிவுக்குக் கொண்டுவர முயற்சி எடுத்துள்ளனர். (உ-ஒ)

மகாராணிக்கு 60 வயது

லண்டன், ஜூன்.15

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிசபெத் தமது 60 வது பிறந்த தினத்தை நேற்று 14 ஆம் திகதி உத்தியோக பூர்வமாகக் கொண்டாடினார். (உ-ஒ)

ரஷ்ய பேராசிரியர் அமெரிக்கா செல்ல அனுமதி கோருகிறார்

மாஸ்கோ, ஜூன் 15

கான்ஸர் நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தனது மனைவியை அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்விக்க அனுமதியளிக்குமாறு ரஷ்ய பேராசிரியர் ஒருவர் விண்ணப்பித்துள்ளார்.

75 வயதுடைய யூதரான நாம் மெய்மன் என்ற மேற்படி பேராசிரியருக்கு ரஷ்யாவைவிட்டு வெளியேற 1975 ஆம் ஆண்டு தடைவிதிக்கப்பட்டது.

சுமார் 30 வருடங்களுக்கு முன்னிருந்தே இவர் ரஷ்ய பாதுகாப்பு சம்பந்தமான பல முக்கியமான தகவல்களைத் தெரிந்தவராக இருந்து வந்துள்ளார்.

ரஷ்ய நாட்டைவிட்டு இவர் வெளியேறினால் அப்பாதுகாப்பு ரகசியங்கள் அம்பலமாகிவிடும் எனத் தெரிவித்தே மேற்படி தடை உத்தரவு விடுக்கப்பட்டது. (உ-ஒ)

ஆயுத குறைப்பு; ரஷ்யா புதிய யோசனை

மாஸ்கோ, ஜூன் 15

போர் ஆயுதங்கள் குறைப்பு பற்றிய புதிய யோசனையை ரஷ்யா வெளியிட்டுள்ளது.

இப்பொழுது உள்ள நீண்ட தூரம் சென்று தாக்கும் ஆயுதங்களை அமெரிக்காவும் ரஷ்யாவும் 40 சத வீதத்திற்கு குறைக்க வேண்டும்

அத்துடன் ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க, ரஷ்ய நாடுகளுக்குச் சொந்தமான ஏவுகணைகளை அகற்றுவதற்கும் இரு நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்.

ஜெனிவாவில் ரஷ்ய நாட்டு குழுவொன்றால் வெளியிடப்பட்ட இந்த யோசனைகள் தொடர்பாக அமெரிக்கா தனது கருத்தை கூற மறுத்து விட்டது. (உ—ஒ)

நாஸாவின் கவனக்குறைவு

வாஷிங்டன், ஜூன்15

கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி விண்ணில் வெடித்துச் சிதறிய ‘சலஞ்ஜர்’ விண்கலத்தின் விபத்திற்கு தங்களது கவனக்குறைவும் ஒரு காரணம் என நாஸா அதிகாரிகள் ஒத்துக் கொண்டுள்ளனர் (உ-ஒ)

வெளி உலகில்

எல்லைத் தூண்கள்

புதுடில்லி, ஜூன்15

நேபாள இந்திய எல்லை நெடுக எல்லையை இனம் காணும் வகையில் பாரிய தூண்கள் நிறுவப்படவுள்ளன.

சுமார் 650 மைல் நீள தூரத்திற்கு இவை காட்சிதரும். (உ-ஒ)

ஆர்ப்பாட்ட பேரணியில் 40 ஆயிரம் பேர்

நியூயோர்க், ஜூன் 15

தென்னாபிரிக்க அரசின் இன ஒதுக்கலுக்கு எதிராகவும் அங்கு அவசர காலச்சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டதற்கு எதிராகவும் சுமார் 40 ஆயிரம் மக்கள் நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஜனாதிபதி றேகன் தென்னாபிரிக்க பிரதமர் போத்தா ஆகியோருக்கு எதிரான சுலோக அட்டைகளை பேரணியில் கலந்து கொண்ட மக்கள் எடுத்துச் சென்றனர்.

சகல நாடுகளும் தென் ஆபிரிக்காவிற்கு வழங்கி வரும் உதவிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர்கள் கோரினர். (உ—ஒ)

காரில் வெடிகுண்டு! மூவர் பலி

கேப்டவுண். ஜூன்15

தென் ஆபிரிக்காவின் டார்பன் நகரப்பகுதியொன்றில் காரொன்றுள் வைக்கப்பட்ட வெடிகுண்டு வெடித்ததால் மூவர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனர். அருகிலிருந்த இரு ஹோட்டல்களும் சேதமடைந்தன. (உ-ஒ)

சோதிடக் கடிகாரம்

லண்டன், ஜூன் 15

இத்தாலியைச் சேர்ந்த மினோஜி என்பவர் ஒரு சோதிடக் கடிகாரத்தைக் கண்டு பிடித்திருக்கின்றார்

நம் பிறந்த நேரம், திகதி இவற்றைக் குறிக்கக் கூடியதாக இதன் முட்களைத் திருப்பினால் போதும்.

நம் பொருளாதார நிலைமை, உடல் நலம், திருமண வாழ்க்கை முதலிய பல விடயங்களைப் பற்றிய ஆருடம் உடனே கிடைத்து விடும்

இதை உருவாக்க இவருக்கு 10 ஆண்டுகள் சென்றன. சோதிடர்கள் கழகம் இந்த கண்டுபிடிப்பை அங்கீகரித்துள்ளது: (உ-5)

றேகனின் கடிதம்

லண்டன், ஜூன் 15

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜுல்ட்ஸும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் ஸ்வெனுஸ்கியும் மிக விரைவில் ஐரோப்பிய நாடு ஒன்றில் சந்தித்துப் பேச வேண்டும் எனத் தெரிவித்து அமெரிக்க அதிபர் றேகன் ரஷ்ய அதிபர் கோர்பச்சேவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

ஆயுதப் பரிகரணம் தொடர்பான பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு றேகன் இந்தக் கடிதத்தில் விருப்பம் தெரிவித்திருக்கிறார். (உ)

போதைப்பொருள் பிடிபட்டது

லண்டன், ஜூன் 15

லண்டன் சுங்கப் பொலீஸார் 80 லட்சம் டொலர் பெறுமதியான போதைப் பொருள்களை கைப்பற்றினர். (இ-5

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சிங்களவரில் தங்கியிருக்கவில்லை

இதனை நாம் உணரவேண்டும்

புல்ஜின்ஸ் அறிவுரை

பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ், கடந்த புதன்கிழமை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் ‘இன்றைய இந்தியாவும் இந்திய - இலங்கை உறவுகளும்’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

அடிப்படைக் கல்விகள் நிறுவனத்தின் ஆதரவுடன் இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது

அப்பேச்சின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

உலகின் பூகோள ரீதியான அரசியலில் பெரிய நாடுகள் சிறிய நாடுகளுடனும் சிறிய நாடுகள் பெரிய நாடுகளுடனும் பிரச்சினைக்குள்ளாவது உண்மையே

இந்தியா இதற்கு விதிவிலக்கு அல்ல

இந்தியா பிறந்ததில் இருந்து, அது தனது அயல் நாடுகளுடன் பிரச்சினைப்பட்டே வந்துள்ளது.

எனவே இலங்கை-இந்திய உறவுகள் மோசமான நிலையை இப்போது அடைந்து இருப்பதை எவராலும் முன்கூட்டியே கூறியிருக்க முடியும்.

பாகிஸ்தான் போன்று இந்தியாவுடன் எம்மால் யுத்தம் செய்ய முடியாது.

எப்படியும் இந்தியாவுடனான யுத்தம் பாகிஸ்தானை இரண்டாகப் பிரித்தது பின்னர் இராணுவமயப்படுத்தப்பட்டது. அதனால் பாகிஸ்தானில் ஜனநாயகம் இறந்தது.

பெரிய நாடு - சிறிய நாடு என்ற உறவு முறையில் தமது அணுகு முறை அமைய வேண்டும்.

ஐந்து வழிகளில் இந்த அணுகு முறைகள் அமையலாம்.

அவையாவன:

1. இந்தியா பற்றிய எமது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

2. எம்மை ஆதரிக்கக் கூடிய ஒரு சாராரை இந்தியாவில் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

3. எமது இராஜதந்திரத்தை கூர்மைப்படுத்த வேண்டும். அதன் மூலம் இந்தியா, தமிழ்நாடு ஆகியவற்றின் கொள்கை வகுப்பாளர்களை சந்திக்க தயாராக வேண்டும்.

4. இந்தியப் பிரதமர் காந்தி சிங்களவரின் ஆதரவில் தங்கியிருக்கவில்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இதை மனதில் வைத்து இந்தியாவுடன் யதார்த்தபூர்வமான அணுகு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5. இந்தியாவினால் எம்மை அழிக்க முடியும் எம்மால் இந்தியாவை அழிக்கமுடியாது இதை நாம் உணரவேண்டும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் சீர்குலைவதற்குக் காரணமாக உள்ள ஏனைய பிரச்சினைகளுடன் இனப்பிரச்சினையும் ஒன்றாகி விட்டது.

1983 இல் இனப்பிரச்சினை தொடங்குவதற்கு முன்னரே இந்திய அரசாங்கம் இலங்கையைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கி விட்டது.

இன்று வட இந்தியாவில் உள்ள ஏஜன்ஸிகள் போராளிகளுக்கும் தமிழருக்கும் பொருளுதவி செய்து வருகின்றன. இலங்கை விவகாரத்தில் தலையிடவே அந்த ஏஜன்ஸிகள் இவற்றைச் செய்கின்றன.

இலங்கை சம்பந்தமான தனது [illegible] கொள்கைகள் குறித்து இந்தியா கவலையடையத் தொடங்கியிருக்க வேண்டும்.

பார்வையாளர் நிலையில் இல்லை

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விஷயத்தில் இந்தியா வெறும் பார்வையாளராக இருக்க முடியாது; பங்களிப்பாளராகத் தான் இருந்து வருகின்றது.

சீக்கியப் பிரச்சினையை பயங்கரவாதமாக இந்தியா கருதுகிறது. ஆனால் தென் இந்தியாவில் போராளிகளின் முகாம்கள் இயங்குவதைப் பொறுத்துக் கொள்கிறது

ஆரம்பத்தில் தமிழ் நாட்டில் போராளிகளின் முகாம்கள் இல்லை என்றே இந்தியா கூறிவந்தது. தற்போதைய இந்திய அரசாங்கமே அப்படியான முகாம்கள் இருப்பதை ஒப்புக் கொண்டு உள்ளது.

இந்த நிலையில் இலங்கை நான்கு விஷயங்களைச் செய்ய வேண்டியுள்ளது.

1. எமக்கு உதவி செய்யும்படி இந்தியாவின் நேசநாடுகளை தீவிரமாக வற்புறுத்த வேண்டும்.

இது விஷயத்தில் இந்தியாவைத் தாண்டக் கூடிய ஒரே ஒரு நாடு ரஷ்யா தான். ஆகவே திரு ஜெயவர்த்தனாவின் ரஷ்ய விஜயம் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்று.

2. இலங்கைப் பிரச்சினைத் [illegible] சம்பந்தமாக அரசு— எதிர்க்கட்சி முன்னணி ஒன்று அமைக்கப்படவேண்டும். இது இந்தியா, போராளிகள், உலகம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும்.

3. காம்ப் டேவிட் உச்சி மாநாட்டைப் போல், ஜெயவர்த்தனா-ராஜீவ் காந்தி உச்சி மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை இருவரும் பேசிக் கொண்டே இருக்க வேண்டும்.

4. நாட்டின்— அதன் தலைவர்களின் செயற்பாடுகள் நல்ல ராஜதந்திரத்தைக் காட்டக் கூடியதாக அமைய வேண்டும்.

இந்தியாவின் தென் கரையோரப் பகுதிகள் முதலில் பாதுகாப்பானவையாகஇருந்தன. ஆகையால் இப்போதுஇலங்கையில் எவ்வளவு இராணுவ கேந்திர நிலையங்கள் இருப்பினும் எமக்கு பாதுகாப்பு இல்லை

எப்படியிருப்பினும் இந்தியாவின் ஆக்கிரமிப்பு இடம் பெறும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

அப்படி ஒரு யுத்தம் நடந்தால் அது உலகில் வெறுப்பை ஏற்படுத்தும்; இந்தியாவைப் பிரித்து விடும்.

ஆனால் இந்தியா வேறு வழிகள மூலம் தனது எண்ணங்களை அடைய முடியும்.

போராளிகளை ஆதரிப்பதன் மூலம் அல்லது பொருளாதாரத் தடை விதிப்பதன் மூலம் இந்தியா தனது நோக்கத்தை அடையலாம்

இலங்கையின் ஜனநாயகத்துக்கு எதிராக நீண்ட காலச் சதி நடைபெற்று வருகின்றது.

எமது ஜனநாயகத்தை நாம் இழந்து விட்டால் எல்லாவற்றையும் நாம் இழந்து விடுவோம்.

இலங்கைக்கு ஒரு சாபக்கேடு உண்டு என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு

எப்போதாவது ஓர் அரசாங்கம் நல்லபடியாகச் செயற்பட்டு வந்தால் ஏதாவது அழிவு ஏற்படச் செய்கிறது. எமது தலை எழுத்து அப்படிப் போலும்.

கர்ம வினைப்பயன் தொடர்ந்து நாட்டை அழித்துக் கொண்டிருக்கிறது. (உ-எ)

சமய சந்நிதிகளில்

வைரவர் பொங்கல்

பருத்தித்துறை, ஜூன் 16

புலோலி கிழக்கு அருள் மிகு தோட்டக்கடவை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இம்மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும் 20 ம் திகதி திருவிளக்கு ஏற்றும் உற்சவமும் 26 ம் திகதி மடப்பண்டம் எடுக்கும் உற்சவத்துடன் பொங்கல் விழா ஆரம்பமாகி இரவிரவாகப் பொங்கல் நடைபெற்று சனி காலை விழா முடிவுறும்.

(ஒ-109)

ஆயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 16

பொது வாழ்க்கையில் ஈடுபடும் அரசியல் வாதிகள், கூட்டுத்தாபனத் தலைவர்கள் மற்றும் பொதுத்துறை அதிகாரிகளுக்கு எதிராக ஆயிரத்துக்கு அதிகமான முறைப்பாடுகள் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பொதுமக்கள் முறைப்பாடு அனுப்பும் கடைசித் திகதி ஜூலை 7 வரை நீடிக்கப்பட்டு உள்ளது. (எ-இ)

பொய்யாமொழி

குறள்:

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு.

பொருள்:

அறம் இஃது என்று அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் சேரும் திறன் அறிந்து அதற்கு ஏற்றவாறு சேருவாள்.

பாதுகாப்பான சூழலில்
ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி நேர
சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
ஆர். ஜி. கட்டடம், ஸ்ரான்லி வீதி,

உதயன்
16 — 06 — 1986 திங்கட்கிழமை

யாழ்நகர்.
யாழ். நகரிலே ஆறு ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக
ரெலிபோன் சேவையிலேயே
கண்ணும் கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிகுளோப் ரெலிபோன்: 25088
ஆறு சமாந்தர லைன்கள் கொண்டது

4 ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே இனப்பிரச்னைக்கு தீர்வு

சமசமாஜ பிரமுகர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன்16 நான்கு ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

லங்கா சமசமாஜக் கட்சியின் பிரமுகர் டாக்டர் கார்லோ பொன்சேகா கண்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

டாக்டர் பொன்சேகா மேலும் சொன்னதாவது:

இனப் பிரச்சினைக்கான முதல் ஒப்பந்தம் பண்டா—செல்வா உடன்படிக்கை.

இரண்டாவது டட்லி-செல்வா உடன்படிக்கை.

மூன்றாவது இந்திரா-ஜே. ஆர். உடன்படிக்கை.

நான்காவது இணைப்பு-சி தொடர்பாகக் காணப்பட்ட உடன்பாடு.

இனப் பிரச்சினைக்கான எந்த அரசியல் தீர்வும் இந்த நான்கு உடன்படிக்கைகளின் அடிப்படையில்தான் அமைய வேண்டும்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ஜே. ஆர். எதிர்த்தார்.

டட்லி-செல்வா ஒப்பந்தத்தை சிறிமாவோ எதிர்த்தார். துரதிர்ஷ்டவசமாக ல.ச.ச.க. கம்யூனிஸ்ட் கட்சிகளும் சிறிமாவுடன் ஒத்துழைத்தன.

எப்படி இருப்பினும் லங்கா சமசமாஜக்கட்சி இனப்பிரச்சினை சம்பந்தமாக தனது ஆரம்பகாலக் கொள்கைகளைக் கைவிடவில்லை,

ஆங்கிலத்துக்குப் பதில் சிங்களத்தை நிர்வாக மொழியாக்குப்படி டாக்டர் என். எம். பெரேராவும், திரு பிலிப் குணவர்த்தனவும் 1934-இல் சட்டசபையில் பிரேரணை கொண்டு வந்தனர்.

சட்டசபையில் 1944-ல் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, சிங்களத்தை உத்தியோக மொழியாக்க வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தார்.

1956 இல் யாழ்ப்பாணத்தில் வைத்து சேர் ஜோன் கொத்தலாவலை சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குவதாகச் சொன்னார்.

இதைத் தொடர்ந்து களனி ஐ தே க மாநாட்டில் உத்தியோக மொழி சிங்களம் மட்டுமே என்ற பிரேரணையை திரு ஜெயவர்த்தன கொண்டு வந்து நிறைவேற்றினார்.

1956 இல் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா வெற்றி பெற்று, சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றினார்.

ஆனால் தமிழருக்குத் தாம் செய்த அநீதியைத் துடைக்க திரு. பண்டாரநாயக்கா பின்னர் திரு செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் செய்தார். அந்த ஒப்பந்தத்தைத் தான் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன கண்டிக்குப் பாத யாத்திரை சென்று கிழித்தெறிய வைத்தார்.

இன்றும் ஐ. தே. க, இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை; பிரச்சினைக்கான தீர்வும் ஐ தே கட்சியிடம் இல்லை.

காலத்துக்குக் காலம் சிங்களவரின் வன்செயல்களுக்கு தமிழர் ஆளாகி வந்திருக்கின்றனர். ஆனால் தமிழ்த் தலைவர்கள் அஹிம்சை வழியில் சென்றே போராடினர்.

1977 வன்செயல்களில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் குழப்பப்பட்டன. யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டது அதன் பின்னரே தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்கத் தொடங்கினர்

யாழ் சென்று நூல் நிலையத்தை எரித்த சிங்கள வீரர்கள் தங்கள் தாயகத்துக்கு உயிருடன் அச்சமயத்தில் திரும்பி வரக்கூடியதாக இருந்தது— இவ்வாறு அவர் மேலும் கூறினார், (உ-எ)

வித்தாரம்

என்ன முரளியார், வானத்தைப் பார்த்துக் கொண்டு சைக்கிள் ஓடிக் கொண்டு வாறீர்? மேலை என்ன ஹெலியோ அல்லது பிளேனோ?

வீட்டிலையிருந்து வெளிக்கிடயிக்கை மேலாலை 'அல்லூறு' ஏதாவது வட்டமிடுகுதோ, இருந்தாப்போலை வந்து சுட்டுத் தள்ளுமோ அல்லது குண்டு போடுமோ எண்டு பாத்தும் யோசிச்சும் வெளிக்கிடவேண்டிய காலம் தான் இது.

றோட்டாலை போகையுக்கையும் பலபேர் வானத்தைப் பாத்தபடி தான் போகினம்.

முந்தி ஒரு காலத்திலை, நாங்கள் பள்ளிக்கூடத்திலை படிக்கிற காலத்திலை, பிளேன் பறந்த சத்தம் கேட்டா எல்லாரும் முத்தத்துக்கு வந்து விடுப்புப் பாக்கிறது ஞாபகத்துக்கு வருகுது.

இப்ப அதுக்கு நேர் மாறு. பிளேனைக் கண்டால் சனம் ஓடி ஒளிக்க வேண்டி இருக்குது.

இப்ப இரண்டு மூண்டு நாளா ரவுண் பக்கம் அடிக்கடி ஹெலிக்கொப்டர் ஓட்டம். என்னடா எண்டு கேட்டால், சிப்பாய்கள் இடமாற்றம் நடக்குதாம்.

அதோடை சாட்டாக இராணுவ முகாம்களையும் பெலப்படுத்திறதாகக் கேள்வி அங்காலை ராஜீவுக்குக் கடிதம். பேர்ணாட் மூலம் விளக்கம் வியாக்கியானம் எண்டு எல்லாம் அனுப்பினம். இஞ்சாலை இராணுவ முகாம்களைப் பலப்படுத்துகினம்.

உவையின்ரை போக்கு ஒண்டுமாப் புரியயில்லை.

உவை யாழ்ப்பாணத்திலேயும் கிளிநொச்சியிலேயும் தோத்துப்போச்சினம். பேச்சுவார்த்தை அது இது எண்டு சொல்லுறதுக்கு முன்னம் தங்கடை பலத்தை ஒருக்கா காட்டிப்போட வேணும் எண்டு அச்சாணியார் யோசிக்கிறாரோ என்னவோ..!

உந்தச் சிப்பாய்மார் இடமாற்றத்தைச் சொல்லத்தான் ஒரு கதை ஞாபகம் வருகுது

கொஞ்சநாளைக்கு முன்னம் பென்ஷன் எடுக்க வந்த ஒரு முதியவரை 'சென்றி'க்கு நிண்ட சிப்பாய் ஒருவர் கூப்பிட்டு இப்பிடிச்சொன்னாராம்:- 'உங்கடை பெடியள் எங்களை உப்புத் தண்ணி குடிக்க வைச்சிட்டினம். உங்கள் எல்லாரையும் கெதியா உப்புத்தண்ணி குடிக்க வைப்போம். கொஞ்சநாளைக்கு நீங்கள் நல்லதண்ணியைக் குடியுங்கோ.'

இது ஒண்டு காணுமே அவையின்ரை வெப்பியாரத்தைக் காட்டுறதுக்கு.

* * *

என்ன, தாங்கள் இந்த முறை இந்தியாவுக்கு அனுப்பின விளக்கம், வியாக்கியானங்கள் பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டுவரும் எண்டு தான் நம்புவதாக எல்லே அத்துலத்தார் சொல்லுறார். அப்பிடி என்ன பெரிசா எழுதிக் குடுத்திருக்கினம்.

பழையபடி வேதாளம் முருங்கை மரத்திலை எண்டதுபோலை, மாகாணசபைதானே புதிய யோசினையிலை இருக்கெண்டு எனக்குக் கேள்வி. அவைக்கு உது பெரிய மலைபோலப் படுகுதாக்கும். ஆனா எங்களுக்கு அது பொருந்துமோ..?!

எங்களை வற்புறுத்தி--

(1ம் பக்கத் தொடர்ச்சி) தேன்.

தீவிரவாதிகளினால் கடந்த ஆண்டு மே மாதம் எமது கிராமம் தாக்கப்பட்டது எனது வீடு முற்றாக அழிக்கப்பட்டது. உடமைகள் அழிக்கப்பட்டன

அகதியாக அக்ரபோதி முகாமுக்குச் சென்றேன்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி அதிகாரிகள் எம்மை அழைத்துச் சென்று பழைய இடத்தில் குடியமர்த்தினர். போதிய பாதுகாப்பு வழங்காமல் இப்படி அந்த அதிகாரிகள் செய்தனர்.

இரண்டு தினங்கள் கழித்து தீவிரவாதிகள் மீண்டும் வந்து கிராமத்தைத் தாக்கினர். மீண்டும் அகதி முகாமை தஞ்சமடைந்தேன்.

அதன்பின்னர் நானும் ஏனைய அகதிகளும் தலால என்ற இடத்துக்குச் சென்றோம். பின்னர் அங்கு இருந்து எனது சொந்த ஊரான அம்பலாந்தோட்டைக்குச் சென்றோம்.

இந்த ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி அம்பலாந்தோட்ட பொலீஸ் பொறுப்பதிகாரி ஆயுதந் தாங்கிய பொலீஸ் கோஷ்டியுடன் எனது வீட்டுக்கு வந்தார்.

பழைய இடத்துக்குச் செல்லும்படி என்னை வற்புறுத்தினார்கள். தீவிரவாதிகள் தாக்குவார்கள் என்று கூறி நான் மறுத்தேன் இப்படிச் சொன்னதற்காக பொலீஸார் என்னைத் தாக்கினர். அந்தக் காயங்களுக்காக இரண்டு தினங்கள் அம்பலாந்தோட்ட ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்றேன்.

பொலீஸாரிடமிருந்து தப்புவதற்காக பல சிங்கள அகதிகள் அம்பலாந்தோட்டை காடுகளினுள் மறைந்து வாழ்கின்றனர்.

சில அகதிகளைப் பொலிஸார், பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருக்கின்றனர்.

இப்படி விண்ணப்பத்தில் குசுமாவதி கூறியிருக்கிறார்

இந்த விண்ணப்பம் கடந்த வியாழன் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பரிந்தா ரணசிங்க, எல். எச். டி. அல்விஸ், எச். ஏ. ஜி. டீ. சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது

குசுமாவதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சரத் விஜயசிங்க நீதியரசர்களுக்கு சொன்னதாவது;

விண்ணப்பதாரர் இன்னும் பொலீஸாருக்குப் பயந்து தலைமறைவாகத்தான் வாழ்கின்றார். அவரின் அடையாளக் கார்ட் உடமைகளை பொலீஸார் தங்கள் பொறுப்பில் வைத்துள்ளனர்.

குசுமாவதியின் சகோதரி தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்.

நாட்டில் எங்கே வசிப்பது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. அரசமைப்புச் சட்டத்தில் 14 ஆவது ஷரத்தும் அதை உறுதி செய்கிறது.

குசுமாவதியைப் பொறுத்த மட்டில் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமைச் ஷரத்தை மீறி அரசு அதிகாரிகள் செயல்படுகின்றனர்.

இப்படி சட்டத்தரணி சொன்னார்.

இதைத் தொடர்ந்து குசுமாவதியின் விண்ணப்பத்தை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வது என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது (உ-எ)

திருட்டுக் கோஷ்டிகள் இரண்டு இடங்களில் இளைஞரிடம் பிடிபட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 16 கல்வியங்காடு முத்திரைச்சந்தைப் பகுதிகளில் அண்மைக்காலமாக நடந்துவந்த பல திருட்டுகளுக்குக் காரணமானவர்கள் சனிக்கிழமை இரவு பிடிபட்டனர்.

இரவு பத்து மணியளவில் கல்வியங்காடு — பருத்தித்துறை வீதியில் இளைஞர் கோஷ்டி ஒன்று வீதியில் வாகனங்களின் வேகத்தைக் குறைப்பதற்காக வீதித் திட்டி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது கல்வியங்காட்டிலுள்ள கடை ஒன்றினுள் மின் விளக்குகள் திடீர் திடீரென அணைந்து அணைந்து எரிந்ததைக் கண்டு சந்தேகங்கொண்ட இளைஞர் கோஷ்டியினர் கடையைச்சுற்றி வளைத்துக் கொண்டு, கடை உரிமையாளரை அழைத்து வந்து கடையைத் திறப்பித்தனர்.

கடைக்குள் அரிசி மூடைகளுக்குப் பின்னர் பதுங்கி இருந்த திருடன் அங்கு நின்ற இளைஞர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டான்,

இந்தத் திருட்டுத் தொடர்பாக இவருடன் சம்பந்தப்பட்ட மேலும் பலர் இளைஞர் கோஷ்டியினால் பிடிபட்டதாகவும் தெரியவருகிறது.

இதனையடுத்து பல திருட்டுக்கள்பற்றிய விபரங்கள் அம்பலத்திற்கு வரலாம் என நம்பப்படுகிறது

குருநகரில்

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்ததாகக்கூறப்படும் ஐந்துபேர் நேற்று இளைஞர் கோஷ்டியினால் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் திருடியதாகக் கூறப்படும் பல மின்சார மோட்டார்களும் வேறு பொருள்களும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

திருட்டுக் கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடே இத்திருட்டுச் சம்பவங்களை அம்பலத்திற்குக் கொண்டுவரக் காரணம் எனக் கூறப்படுகிறது.

மேலும் பல பொருள்கள் இவர்களிடம் இருந்து மீட்கப்படலாம் என தெரியவருகிறது.

பிடிபட்ட அனைவரும் இளைஞர்களின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனச் சொல்லப்படுகிறது. (உ-10)

ஈழ விடுதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி) கோரியும் சுதந்திர ஈழம் அமைக்கும் இலட்சியத்துடனும் நடத்தப்படும் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தைப் பாராட்டுவது அதுபற்றி தெளிவான கூட்டுச் சிந்தனை ஒன்றை உருவாக்குவது, அடக்கப்பட்ட மக்களின் நிலை குறித்து சர்வதேச அங்கீகாரம் பெற விரிவாகச் செயற்படுவது.''

-இதுவே மாநாட்டின் பொருளாக இருக்கும். (உ-எ)

தமிழ் நாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி) லில், வகை, தொகையின்றி காட்டுமிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டு வருகிறார்கள் பாரதம் இதனைப் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பது தவறானதாகும்.

கொலைகளைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை உடன் தேவை.

இல்லையேல் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படும். தொடர்ச்சியாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், போராட்டங்களும் நடைபெறும். முழுத் தமிழகமே ஸ்தம்பிதம் அடையும் நிலை உருவாகும்

இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்கும் நிலை இல்லை

இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவது தவறு எனக் கருதப்படுமாயின் —

தமிழ் போராளிகளுக்கேனும் இந்தியா நேரடியாக ஆதரவும் உதவியும் வழங்க வேண்டும்.

இப்படித் தமிழகத் தலைவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். (அ-உ-6)

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 16 'கல்வியில் அளவிடும் மதிப்பீடும்' என்ற நூல் வெளியீட்டுவிழா நாளை (செவ்வாய்) பிற்பகல் 2 மணியளவில் யாழ் பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நூலை யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சின்னத்தம்பி எழுதியிருக்கிறார்

விழாவுக்கு பேராசிரியர் ப. சந்திரசேகரம் தலைமை வகிக்கின்றார். (உ-எ)

பருத்தித்துறை பிரசைகள் குழு விலகியது

யாழ்ப்பாணம் ஜூன் 16 யாழ் மாவட்ட பிரசைகள் குழுவில் இருந்து ஜூன் 14 முதல் பருத்தித்துறைப் பிரசைகள் குழு விலகி விட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரசைகள் குழுவின் கூட்டம் சனிக்கிழமையன்று நடைபெற்றது. அச்சமயம் இணைப்புக்குழுவில் இருந்து விலகும் முடிவு எடுக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பிரசைகள்குழுப் பொதுச் செயலாளர் திரு. சி. சுப்பிரமணியம், குழுவின் தீர்மானத்தை கடிதம் மூலம் பிரசைகள் இணைப்புக்குழுச் செயலாளருக்கு அறிவித்துவிட்டார்.

அத்தீர்மானம் வருமாறு:

31.5.86 இல் எமது தலைவர் கடத்தப்பட்டது குறித்து இணைப்புக் குழுவின் உயர் மட்டத்தில் இருப்பவர்களுக்கு முறையிடப்பட்டது. அவர்கள் தொடர்ந்து மௌனஞ் சாதித்து வருகின்றனர். ஆகவே அந்த அமைப்பில் தொடர்ந்தும் உறுப்பினராக இருப்பதில் அர்த்தம் இல்லை. எனவே 14.6 86 முதல் இணைப்புக் குழுவில் இருந்து விலகுவது என்று ஒருமனதாக முடிவுசெய்கிறது.''

இப்படி பருத்தித்துறை பிரசைகள் குழுவின் தீர்மானம் கூறியுள்ளது. (உ-எ)

ஊரடங்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி) முன்தினம் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு நேற்று மாலையுடன் காலாவதியானது.

தொடர்ந்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதா என்பது குறித்து உத்தியோகபூர்வ செய்தி ஏதும் கிடைக்கவில்லை. (உ-10)

பலாலியில்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி) தமது நகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சங்கம் கேட்டுள்ளது.

நகை பெற வேண்டியவர்கள் இரு தினங்களில் எந்த நாளிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் ஏற்கனவே விநியோக நேரத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் போன்று இனி மேலும் நடைபெறாதிருக்கும் வகையில் அங்கு செல்லும் வாடிக்கையாளர்கள் தாம் செல்லும் வாகனங்களை விநியோக நிலையத்திற்கு மிகத் தொலைவில் நிறுத்தி விட்டு நடந்து செல்லுமாறும்—

அச்சுவேலி - வயாவிளான் பாதையூடாக பிரயாணத்தை மேற்கொள்ளுமாறும் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

மாவட்டப் போட்டி நாளை ஆரம்பம்

இந்து மைதானத்தில் இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16 யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறுகின்றன

யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் போட்டிகள் நடைபெறும்

479 பாடசாலைகள் பங்குபற்றிய வட்டார நிலைப் போட்டியிலிருந்து முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்ற பாடசாலை மெய்வல்லுநர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்வர்.

போட்டிக்கான அழைப்புக்களை கல்வித் திணைக்களம் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

தபால் விநியோகம் சீரின்மையால் அழைப்புக்கள் கிடைக்காத—அதே வேளை வட்டாரப் போட்டிகளில் இருந்து மாவட்டப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மெய்வல்லுநர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு வட்டாரக் கல்வி அதிகாரி (உடற்கல்வி) திரு. வி கணேசலிங்கம் பத்திரிகை அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டிருக்கிறார் (ந-7)

மண்டைதீவுப் படுகொலைகள்

உயிரிழந்தவர்களுக்கு உதவ விசேட நிதியம்

யாழ்ப்பாணம் ஜூன் 16 மண்டைதீவுப் படுகொலையில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக விசேட நிதியம் ஒன்றை குருநகர் மீன்பிடி அபிவிருத்திச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்த நிதியத்தை நிர்வகிக்க விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ், டாக்டர் ஏ. எல். ஏப்ரஹாம். திரு. கே கிறிஸ்தோப்பர், திரு. எல். ஹென்றி, திரு. கே. சிலுவைதாஸ் ஆகியோர் இக்கமிட்டியின் உறுப்பினர்களாக உள்ளனர்.

பணமாக உதவ விரும்புவோர், இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையில் உள்ள சங்கத்தின் நடைமுறைக் கணக்கு இலக்கம்; சி 21,998க்கு அனுப்பி வைக்கலாம். (உ-எ)

திருட்டு முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், ஜூன்16 முத்திரைச் சந்தையில் உள்ள தனியார் பொறியியல் ஸ்தாபனம் ஒன்றில் சனி இரவு நடைபெற்ற திருட்டு முயற்சி தோல்வியில் முடிந்தது

சனிக்கிழமைஇரவு எட்டு மணியளவில் இந்த ஸ்தாபனத்தில் இருந்த இரும்பு அலுமாரிகள் வெட்டி உடைக்கப்பட்டதாயினும் அதற்குள் எந்தவித பொருள்களும் இல்லாதபடியால் கொள்ளையர் தம் முயற்சியைக் கைவிட்டுச் சென்றனர். (உ-10)

தொலைதொடர்பு மீண்டும் அவுட்!

யாழ்ப்பாணம் ஜூன் 16 யாழ்ப்பாணத்திற்கும் வெளியூர்களுக்கும் இடையிலான நேரடி தொலைத் தொடர்பு மீண்டும் நேற்று முன்தினம் இரவிலிருந்து செயல்இழந்தது.

மடுகந்தை, அநுராதபுரம் போன்ற இடங்களில் உள்ள பிரதான வானொலி தொலைத் தொடர்பு நிலையங்களில் ஏற்பட்ட இயந்திர கோளாறே இதற்குக் காரணம் எனத் தொலைத் தொடர்பு திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மீண்டும் இன்று காலை அல்லது நண்பகலுக்கு பின் நேரடி தொலைத் தொடர்பு செயல்படலாம் என அந்த உயர் அதிகாரி நம்பிக்கை தெரிவித்தார். (உ-6)

சிப்பாய்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம் ஜூன் 16 வடபகுதியில் உள்ள ஆயுதப்படை முகாம்களிலிருந்து ஆயுதப்படையின் ஒரு பகுதியினர் வடபகுதியில் தமது கடமை காலங்களை முடித்து கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இடமாற்றங்கள் பெற்று தென்பகுதிக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் சேவையாற்ற சென்றுள்ளதாக அறியப்படுகின்றது.

வடபகுதி முகாம்களான யாழ்ப்பாணம், பலாலி, தொண்டமானாறு, நாவற்குழி, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, கிளிநொச்சி, ஆனையிறவு, பூநகரி, மாங்குளம் போன்ற முகாம்களிலிருந்து சுமார்1500க்கும் மேற்பட்ட ஆயுதப்படையினர் இடமாற்றம் பெற்றனர். (உ-6)

மாலினி திருமணம்

பிரபல சிங்களத்திரை நடிகை மாலினி பொன்சேகா சிங்கள திரை நடிகரான டயலை திருமணம் செய்தார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இத்திருமணத்திற்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், பிரதமர் ஆர். பிரேமதாஸாவும் சாட்சிகளாகக் கையெழுத்திட்டனர். (உ-9)

விசேட
அறிவித்தல்
கீழ்க் குறிப்பிட்ட எமது ஸ்தாபனங்கள் இரண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன
புதிய விலாசம்:
Office Equipment Ltd.
Kalamazoo Systems Ltd.
No 45, Pirappankulam Road,
Off K .K S. Road, Jaffna.
மினுசார சந்தியிலிருந்து 100 யார் தூரத்திலுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 16—6—1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under Number Q J 60 W 86